பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
15 12 2024 **SUNDAY** 6 45 **AM**
வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. சேவை, அர்ப்பணிப்பு, நன்மதிப்பு ஆகியவை நாட்டின் கலாச்சார மாண்புகளை எடுத்துரைப்பதாக உள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்

3. தமிழகத்தின் பொருளாதாரத்தை ஒரு டிரில்லியன் டாலர் அளவுக்கு உயர்த்தும் நோக்குடன் மாநில அரசு செயல்பட்டு வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் இன்று காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

நாட்டில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நடைபெற்ற இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 75 ஆண்டு கால பயணம் குறித்த சிறப்பு விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், இதற்கென நீண்ட விவாதம் நடத்தப்பட்டுள்ளதாகவும், தேசிய ஜனநாயக கூட்டணி அரசு இச்சட்டத்தை கொண்டு வருவதற்கான பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் கூறினார்.

நமது நாட்டின் ஜனநாயகம் உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பெண்கள் தலைமையிலான வளர்ச்சியில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அரசியலமைப்புச் சட்டம் 75 முறை திருத்தியமைக்கப்பட்டதாக அவர் கூறினார்.

மதத்தின் அடிப்படையிலான இடஒதுக்கீடு என்பது அரசியல் சாசன சட்டத்தின் உணர்வுகளுக்கு எதிரானது என்று பிரதமர் குறிப்பிட்டார்.

நாட்டின் ஒருமைப்பாட்டு உணர்வை வலுப்படுத்துவதை நோக்கமாக கொண்டு, சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படுவதாக அவர் கூறினார்.

அண்டை நாடுகளில் உள்ள சிறுபான்மையினருக்கு குடியுரிமை வழங்கும் வகையில், குடியுரிமை சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

25 கோடி ஏழை மக்களை வறுமையின் பிடியிலிருந்து வெளிக்கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளுக்கு தமது தலைமையிலான அரசு முன்னுரிமை வழங்கி வருவதாக திரு. நரேந்திர மோடி கூறினார்.

புதிய இந்தியாவை கட்டமைக்கும் நோக்கில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் ஊழலை முற்றிலும் அகற்றுவது உள்ளிட்ட 11 தீர்மானங்களை பிரதமர் முன்மொழிந்தார்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 75 ஆண்டு கால பயணம் குறித்த இந்த விவாதத்தில், பிஜேபி, காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி, சிவசேனா, ஐக்கிய ஜனதா தள் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்.

இந்த விவாதம் மாநிலங்களவையில் நாளை தொடங்கி, இரண்டு நாட்களுக்கு நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

சேவை, அர்ப்பணிப்பு, நன்மதிப்பு ஆகியவை நாட்டின் கலாச்சார மாண்புகளை எடுத்துரைப்பதாக உள்ளது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், மக்களுக்கு சேவை செய்வதே அனைத்துவிதத்திலும் உயர்ந்தது என்று கூறினார்.

நாட்டின் பாரம்பரிய கலாச்சாரம் மற்றும் வரலாற்றின் ஒரு அங்கமாக இருக்கும் வகையில், அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

சேவை மனப்பான்மையே நாட்டை கட்டமைக்க உதவிடும் என்று திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

>>>>><<<<<

2030ஆம் ஆண்டிற்குள் தமிழகத்தின் பொருளாதாரத்தை ஒரு டிரில்லியன் டாலர் அளவுக்கு உயர்த்த வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் மாநில அரசு செயல்பட்டு வருவதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையை அடுத்த தாம்பரத்தில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், மாநில அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், புத்தொழில், தொழில் முனைவு மற்றும் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் உள்ளதாக கூறினார்.

வரும் ஆண்டுகளில் தமிழகத்தில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் உருவாகும் என்று திரு. உதயநிதி ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்தார்.

>>>>><<<<<

தென்காசி மாவட்டத்தில், கடந்த இரண்டு நாட்களாக பெய்த கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து, கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருவதாக மாநில பேரிடர் மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அம்மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - கே.கே.எஸ்.எஸ்.ஆர் 40 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

புயல் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாரபட்சமின்றி நிவாரண உதவிகளை வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களிலும் சிறப்பு வேளாண் பொருளாதார மண்டலம் அமைக்க வேண்டும் என்று திரு. அன்புமணி ராமதாஸ் கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் இன்று காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த இருதினங்களில் மேலும் வலுப்பெற்று மேற்கு – வடமேற்கு திசையில் நகரக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, லட்சத்தீவு மற்றும் மாலத்தீவு பகுதிகளில் நிலவிவரும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி, தொடர்ந்து அதே இடத்தில் நீடிப்பதாகவும், இது 24 மணிநேரத்தில் மேற்கு திசையில் நகர்ந்து வலுவிழக்கக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, அடுத்த ஐந்து தினங்களுக்கு தமிழகத்தில் அநேக இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம்,, திருவாரூர், கடலூர், மயிலாடுதுறை, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை முதல் அதிகனமழை வரை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதை அடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வரும் 17ஆம் தேதிவரை உதகை - மேட்டுப்பாளையம், உதகை – குன்னூர் இடையேயான மலை ரயில் சேவை ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

**>>>>><<<<<**

இருவரிச் செய்திகள்

நியூஸிலாந்து வர்த்தக அமைச்சர் திரு. **Todd Mcclay** அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

**>>>>><<<<<**

ஜார்ஜியாவின் புதிய அதிபராக திரு. **Mikheil Kavelashvili** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**>>>>><<<<<**

இலங்கை அதிபர் திரு. அனுர குமார திசநாயகே, மூன்றுநாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

**>>>>><<<<<**

குடியரசுத் துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், ஒருநாள் பயணமாக இன்று குவாலியர் செல்கிறார்.

**>>>>><<<<<**

தில்லியில் காற்று மாசுபாட்டை குறைக்கும் வகையில், திருத்தியமைக்கப்பட்ட செயல்திட்டம் அமல்படுத்தப்படும் என்று மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

மணிப்பூர் மாநிலத்தில் இருவேறு இடங்களில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர்.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டத்தில், கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தின் செயல்பாடுகள் குறித்த மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுக் கூட்டம் ஆட்சியர் திருமதி. உமா தலைமையில் நடைபெற்றது.

>>>>><<<<<

திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சை முறைகள் குறித்து ஆட்சியர் திரு. தர்பகராஜ் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் தொழுதாவூர், சின்னம்மாபேட்டை ஆகிய இரண்டு கிராமங்களுக்கு இடையே ஒற்றுமையை வலியுறுத்தி சமாதான உறுதிமொழி ஏற்கப்பட்டது.

>>>>><<<<<

சென்னை கோயம்பேட்டில் போதைப்பொருள் வைத்திருந்தது தொடர்பான வழக்கில் மேலும் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

மஸ்கட்டில் நேற்று நடைபெற்ற போட்டியில் இந்தியா 3-1 என்ற கோல்கணக்கில் ஜப்பானை வென்றது.

இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில் இந்தியா - சீனாவை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

சந்தோஷ் கோப்பை கால்பந்துப் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு மேற்குவங்கம் மற்றும் மணிப்பூர் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

ஹைதராபாதில் நேற்று நடைபெற்ற போட்டியில், மேற்குவங்க அணி 3-1 என்ற கோல்கணக்கில் ஜம்மு காஷ்மீர் அணியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் மணிப்பூர் அணி 1-0 என்ற கோல்கணக்கில் சர்வீசஸ் அணியை வென்றது.

>>>>><<<<<

ஒடிசா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இன்று நடைபெறும் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் ரித்விக் சஞ்சீவி, சகநாட்டு வீரரான தருண் மன்னப்பள்ளியை எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் தன்வி ஷர்மா, சீனாவின் **Cai Yan Yan-** ஐ எதிர்கொள்கிறார்.

>>>>><<<<<

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி மும்பையில் இன்று நடைபெறுகிறது.

இப்போட்டி, இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

கோலாலம்பூரில் இப்போட்டி, காலை மணி 11.30-க்கு தொடங்குகிறது.

**>>>>><<<<<**

ஷோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில் இந்தியாவின் **Shrivalli Rashmikaa** தாய்லாந்தின் **Bunyavi Thamchaiwat-**ஐ எதிர்கொள்கிறார்.

**>>>>>END<<<<<**